දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவா ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NCCP /ADM/ 62/ 2018
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 21 .07.2018
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

---

சுற்றறிக்கை இலக்கம்.....02- 177 /2018.......

அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட அனைத்து நிறுவன தலைவர்கள்

**<u>உலக தலை மற்றும் கழுத்து புற்று நோய் தினம் -27 யுலை 2018</u>**

இலங்கையில் 2011 ல் வாய் புற்றுநோய் ஆண்களில் முதலாவது இடம் வகித்ததுடன் (ஆண்களுக்கு ஏற்படும் புற்று நோய்களில் அண்ணளவாக 18%)பெண்களில் பொதுவான புற்றுநோய்களில் ஏழாவது இடம் வகிக்கின்றது.வருடாந்தம் 2000 புதிய வாய் புற்று நோயாளர்கள் இலங்கையில் கண்டு பிடிக்கப்படுகின்றார்கள. 2011 ல் வயது அடிப்படையிலான வாய் புற்று நோய் 100.000 சனத் தொகையினரில் ஆண் ,பெண் வீதம் முறையே 16.4 , 4.1 ஆக அமைந்துள்ளது.இதற்கு மேலதிகமாக வாய் புற்று நோய் ஏனைய புற்று நோய்களைக் காட்டிலும் நாளொன்றிற்கு 2 – 3 என மரணங்களை கொண்ட அதிகூடிய இறப்பு வீதத்தை கொண்டுள்ளது.

வெற்றிலைக் கூர் சாப்பிடுவதை தவிர்த்தல் ,புகையற்ற புகையிலை,பாக்கு உற்பத்திகளை உட்கொள்வதை கைவிடல்,புகைத்தல் அல்க்ககோல் சார்ந்த குடிவகைகளை தவிர்த்துக் கொள்ளுதல் மூலம் வாய் புற்று நோயை பிராதானமாக தடுக்கமுடியும்.வாய்ப் புற்று நோயின் சுமையை கட்டுப்படுத்துவதற்கு வாய் புற்று நோய் உருவாகக் கூடிய காரணிகள் (Oral Potential Malignant Disorders)மற்றும் வாய்ப் புற்று நோய் தொடர்பாக பொது மக்கள் விழிப்புட்டலை அதிகரிப்பது முக்கியமானது.அத்துடன் அதி கூடிய ஆபத்து நிலையை கொண்டிருக்கும் தனி நபர்களை வாய் தொடர்பான ஒழுங்கீனங்கள்,புற்று நோய் தொடர்பாக் கண்டறிவதற்கு பரிசீலித்தல். வாய் புற்று நோயானது ஆரம்ப நிலைகளில்

கண்டறியப்பட்டால் சுகப்படுத்தக் கூடியது. வாய் புற்று நோய் உருவாக்க் கூடிய காரணிகள் உடைய நிலையில் கண்டறியப்பட்டால்(OPMD stage) தடுக்கப்படக் கூடியது. இவ்வாறான உத்திகள் மத்தியில் கடைசி கட்டங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை வாய் புற்று நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படுவதானது வாய் புற்று நோய்க்கான இறப்பு வீத்த்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

புற்று நோய் சம்பவ 2011 தரவுகளின்படி 72 வீத வாய் புற்று நோயாளர்கள் 3 மற்றும்4 ம் நிலைகளில் அறிக்கையிடப்பட்டுள்ளது.இவ்வாறு பிந்திய நிலையில் முன்நிறுத்தப்படுவதற்கான காரணம் வாய் புற்று நோய் காரணிகளை கொண்டுள்ள தனி நபர்களை போதுமான வரை கண்டு பிடிக்க முடியாமை , பரிசீலனை வசதிகளை குறைந்தளவு பயன்படுத்துதல் பொது மக்கள் மத்தியில் வாய் புற்று நோய் தொடர்பான விழிப்புனர்வு குறைவு ஆகியனவாகும், உலகலாவிய ரீதியீல் 'தலை மற்றும் கழுத்து புற்று நோய் தொடரபாக கவணத்தை ஈர்ப்பதற்கும்,பயன் தரும் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கும் உலகலாவிய ரீதியீல் வருடாந்தம் யுலை 27 ம் திகதி 'தலை மற்றும் கழுத்து புற்று நோய்' தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.வாய் புற்று நோய்(உதடு,வாய்குழி,களம் உள்ளடங்களான புற்று நோய்) தலை மற்றும் கழுத்து புற்று நோய்களில் மிக முக்கியமானது.

வாய் புற்று நோய் உருவாகக் கூடிய காரணிகள் மற்றும் வாய் புற்று நோய் காரணிகள் தொடர்பாக பொது மக்கள் விழிப்புனர்வு திட்டங்களை அதிகரிக்குமாறும்,கேடு விளைவிக்கும் வாய் கோளாறுகள்,மற்றும் வாய் புற்று நோய் உருவாகக் கூடிய ஆபத்துள்ள தனி நபர்களை அடையாளம் காண்பதற்கான பரிசீலனைகளை மேற்கொள்ளுமாறு சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களையும் தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் வேண்டுகோள் விடுக்கின்றது..ஆகஸ்ட் ,செப்டெம்பர் மாதங்களில் பிராந்திய பல் வைத்திய அதிகாரி,வைத்திய அதிகாரி (தொற்றா நோய்கள்),வைத்திய அதிகாரி (திட்டமிடல்),சகல சுகாதார வைத்திய அதிகாரிகள்,பல் வைத்தியர்கள் மற்றும் அப் பிரதேச பொது சுகாதார மருத்துவ மாதர்கள் ஆகியோரின் தீவிர பங்களிப்புடன் இந் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
ஆலோசிக்கப்பட்ட சில நடவடிக்கைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

1. சுகாதார வைத்த்திய அதிகாரி ,ஆரம்ப பராமரிப்பு வைத்திய அதிகாரிகள்,பொது வைத்தியர்கள்,வளவாளர்களின் பங்களிப்புடன் மாகாண அல்லது மாவட்ட மட்டத்தில்(உதாரணமாக வாய்,தாடை,முக சீரமைப்பு சத்திர சிகிச்சை நிபுனர்கள்,பல் வைத்தியர்ர்கள்) விரிவுரைகள், கலந்துரையாடல்கள், பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்

2 ஆரம்ப சுகாதார பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கான ,விசேடமாக வாய் புற்று நோய் / வாய் புற்று நோய் உருவாகக் கூடிய ஆபத்துள்ள காரணிகளை கொண்டிருப்போரை சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் பரிசீலிப்பதற்கான விசேட முக்கியத்துவம் வாய்ந்த உள்ளக பயிற்ச்சி திட்டங்கள்.

3. அரசு திணைக்கள தலைவர்களுக்கான (உதாரணம் – பாடசாலைகள்மாவட்ட செயலகங்கள்,மாகாண/மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள்,பிரதேச சபைகள் நகர/ மாநகர சபைகள் போன்றவை)ஆலோசனை திட்டங்கள்

4. வாய் புற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான அரச ஊழியர்கள் ,தனியார் நிறுவனங்களுக்கான விழிப்புனர்வு திட்டங்கள்

5. மக்கள் கூடும் இடங்களான புகையிரத நிலையங்கள்/பஸ் தரிப்பு நிலையங்கள்/ஞாயிறு சந்தை உட்பட சந்தைகள் போன்றவற்றில் வாய் புற்று நோய் தொடர்பான சமூக பங்களிப்பு திட்டங்கள் தனியார் துறை,அரச சார்பற்ற துறையினருக்கு இம் முயற்சிகள் சமூக அமைப்புகளின் பங்களிப்பு ஊடாக (உதாரணம்-அரச சார்பற்ற அமைப்புகள்,சமூகம் சார்ந்த அமைப்புகள்,வர்த்தக அமைப்புகள் ,போன்றவை} அறிமுகப்படுத்தப்படலாம்.வாய் புற்று நோய்க்கான (Theme) நிற ம் நீலம்

6. வாய் புற்று நோய் ஆரம்பத்தில் கண்டறிதல்,பல் வைத்திய நிலையங்களில்,ஆரோக்கிய வாழ்க்கை முறை நிலையங்கள்,நடமாடும் வாய் புற்று நோய் பரிசீலனை நிலையங்களில் இதனை மேலாண்மை செய்தல்.

இந் நிகழ்ச்சி திட்டத்திற்கு தேவையான சுகாதார கல்வி சாதனங்கள் அதாவது போஸ்டர்கள்,ஸ்டிக்கர்கள்,பவர் பொயின்ட் அளிக்கைகள்,வீடியோ அளிக்கைகள்(Posters.Stickers.Powerpoint Presentation & Video Presentation) ஏற்கனவே பிராந்திய பல் வைத்திய அதிகாரிகளுக்கு பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்ச்சி திட்டத்தின் போது தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு திட்டத்தினால் விநியோகிக்கப்பட்டதை மேற் குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு பயன் படுத்தலாம் என்பதை கவணிக்கவும். தலை மற்றும் கழுத்து புற்று நோய் தினம் தொடர்பாக உங்கள் பகுதியில் /நிறுவனத்தில் மேற் கொண்ட நடவடிக்கை அறிக்கை அக்டோபர் 15 ம் திகதி 2018 அல்லது அதற்கு முன்னதாக பணிப்பாளர் / தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு திட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கையில் வாய் புற்று நோய் சுமையை குறைப்பதற்கு இவ் ஆரம்ப முயற்சி தொடர்பாக வசதிகளை ஏற்படுத்தவும் ஒத்துழைப்பு வழங்கவும் உரிய நடவடிகடகைகளை மேற் கொள்ளும் படி சகல மாகாண ,மாவட்ட அதிகாரிகளும் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

தேசிய ரீதியான இந்த முயற்ச்சியில் உங்களுடைய தலைமைத்துவம்,வழிகாட்டல் மற்றும் தீவிர பங்களிப்பு பாராட்டிற்குரியது. மேலும் தெளிவு படுத்துதல் தேவைப்பட்டால் தயவு செய்து சமூக பல் மருத்துவ விசேட நிபுனர் பிரசன்ன ஜயசேகரவை தொடர்பு கொள்ள்வும்(தொலைபேசி இல: 0112368627).

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10

வைத்திய கலாநிதி அனில் ஜயசிங்க
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்

அனைத்து மாகாண சுகாதார அமைச்சர்கள்

அனைத்து மாகாண சுகாதார செயலாளர்கள்

அனைத்து பிரதி பணிப்பாளர்நாயகம்

பணிப்பாளர்-தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு திட்டம்

பணிப்பாளர் தொற்றாத நோய்கள் பிரிவு

பணிப்பாளர்- பல வைத்திய சேவைகள்

பணிப்பாளர்- ஆரம்ப பராமரிப்பு

பணிப்பாளர்- குடும்ப சுகாதார பணியகம்

பணிப்பாளர்-சுகாதார மேம்பாட்டு பணியகம்

மாகாண விசேட சமூக வைத்தியர் நிபுனர்கள்ஃவிசேட சமூக பல் வைத்திய நிபுனர்கள்

பிரதான வைத்திய அதிகாரி (பாடசாலை சுகாதாரம்)

அணைத்து பிராந்திய பல் வைத்திய அதிகாரி

அனைத்து வைத்திய அதிகாரிகள்(தொற்றாத நோய்கள்)

அனைத்து வைத்திய அதிகாரிகள் (தாய் மற்றும் குழந்தைகள் நலம்)

அனைத்து வைத்திய அதிகாரிகள்(திட்டமிடல் வைத்தியர்கள்)